කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
விவசாயத் திணைக்களம்
DEPARTMENT OF AGRICULTURE

පළිබෝධනාශක රෙජිස්ට්‍රාර් කාර්යාලය
பீடைகொல்லி பதிவு அலுவலகம்
Office of the Registrar of Pesticides

අංක 1056, ගැටඹේ, තැ.පෙ. 49, පේරාදෙණිය 20400, ශ්‍රී ලංකාව
இல 1056, கெடம்பே, த.பெ.இல 49, பேராதனை 20400, இலங்கை
No. 1056, Getambe, P.O. Box 49, Peradeniya 20400, Sri Lanka

දුරකථන/தொலைபேசி/Telephone : (94)812388076/388135
ෆැක්ස්/தொலைநகல்/Fax : (94)812388135
ඊ මේල්/மின்னஞ்சல்/E-mail : pest@slt.lk
වෙබ්/மின்னஞ்சல்/Web : www.doa.gov.lk

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது எண் / My No | } RP/VIII/A1 | |
| ඔබේ අංකය / உமது எண் / Your No | } | |
| දිනය / திகதி / Date | | 2019.12.31 |

சுற்றறிக்கை இலக்கம் : RP/AUO/2019-3

பணிப்பாளர் (கருத்திட்டம் மற்றும் பயிற்சி)
மாகாண விவசாய பணிப்பாளர்கள்
(மத்திய,மேல்,வடமத்திய,கிழக்கு. ஊவா,சப்ரகமுவ,வடக்கு,தெற்கு,மேல்)
பணிப்பாளர் (விவசாயம்), இலங்கை மஹவலி அதிகார சபையின் ஊடாக
அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் யாவருக்கும்.

<u>1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைக்கொல்லிகளை கட்டுப்படுத்தற் சட்டம்</u>

<u>சட்ட விரோதமான பீடைக்கொல்லிகள் தொடர்பில் நீதிமன்ற செயற்பாடுகள் மேற்கொள்கின்ற போது பகுப்பாய்வு அறிக்கையை பெற்றுக்கொள்ளல்.</u>

சட்ட விரோதமான பீடைக்கொல்லிகள் தொடர்பில் நீதிமன்ற செயற்பாடுகள் மேற்கொள்வதன் பொருட்டு இரசாயன பகுப்பாய்வு மேற்கொள்வதன் ஊடாக "பீடைக்கொல்லி" என்பதை சட்டரீதியில் உறுதிப்படுத்துவது 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கம் கொண்ட பீடைக்கொல்லிகளை கட்டுப்படுத்தல் சட்டத்தின் 21 (2) (ஆ) எனும் உப பிரிவிற்கு அமைய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களினால் மாதிரிகள் 03 தயார் செய்து அதில் ஓர மாதிரியை "அதிகாரம் பெற்ற பகுப்பாய்வாளர்" இற்கு அனுப்பி வைத்து உரிய இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

02. மேற்போந்த சட்டத்தின் 27 ஆவது பிரிவின் கீழ் "அதிகாரம் பெற்ற பகுப்பாய்வளர்" ஆக இலக்கம் 1293/21 மற்றும் 2003.06.19 ஆம் திகதிய அரசாங்கத்தின் அதி விஷேட வர்த்தமான பத்திரிகைக்கு அமைய இரசாயண பகுப்பாய்வாளரது அறிக்கையை வெளிப்படுத்தும் பொருட்டு பீடைக்கொல்லி பதிவாளருக்கு தற்போது வசதிகள் இல்லை என்பதால் நீதிமன்ற செயற்பாடுகள் பொருட்டு மாதிரி சமர்ப்பிக்கையில் ***பீடைக்கொல்லி பதிவாளருக்கு பகுப்பாய்வு மாதிரியை அனுப்பி வைக்காது இருப்பதுடன்*** அதன் பொருட்டு மேற்போந்த சட்டத்தின் 27 ஆவது பிரிவின் கீழ் "அதிகாரம் பெற்ற பகுப்பாய்வாளர்" ஆக விளக்கி கூறப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வு கூடத்திற்கு நேரடியாக மாதிரியை அனுப்பி வைத்து உரிய இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அ).அரசாங்கபகுப்பாய்வாளர் (Government Analyst)

ஆ).விவசாய திணைக்களத்தின் மத்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் இரசாயன விஞ்ஞானி (தற்போது செயற்படுகின்ற விவசாய திணைக்களத்தின் கண்ணோறுவையில் அமையப் பெற்றுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் அமையப் பெற்றுள்ள மத்திய பகுப்பாய்வு கூடத்தின் பிரதான இரசாயன விஞ்ஞானி (Central Laboratory, Horticulture Research & Development Institute )

இ).இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி நிறுவனத்தின் இரசாயன விஞ்ஞானி (தற்போது செயல் வலப் பெறுகின்ற தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (Industrial Technology Institute)

ஈ).இலங்கை தர நிலை நிறுவனம் (Sri Lanka Standard Institute)

03.ஏற்படக்கூடிய தேவையற்ற தாமதத்தை தவிர்த்துக் கொள்வதன் பொருட்டு பகுப்பாய்வு மாதிரியை "அதிகாரம் பெற்ற பகுப்பாய்வளளர்'' ஒருவருக்கு அனுப்பி வைப்பதற்கு முன்னர் உரிய மூலக்கூறின் பொருட்டு பகுப்பாய்வு வசதிகள் அல்லது முறைமைகள் நிலவுகின்றது என்பதற்கு முழுமையான விசாரணணை மேற்கொள்வது சிறந்தது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

04.அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல் கோவையின் 27 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாதிரிகளுக்கு இலக்கம் இடும் முறையை பின்பற்றி சகல பகுப்பாய்வு மாதிரிகளுக்கும் இலக்கம் இடப்பட்டு அதன் முதலாவது மாதிரியை (உதாரணமாக KU/MA/NA/15/2-1) "அதிகாரம் பெற்றபகுப்பாய்வாளர்'' இற்கும், இரண்டாவது மாதிரியை (உதாரணமாக KU/MA/NA/15/2-2) பீடைக் கொல்லி பதிவாளருக்கும் எழுத்து மூலம் அனுப்பிவைக்கப்பட்டு, மூன்றாவது மாதிரியை (உதாரணமாக KU/MA/NA/15/2-3) சந்தேக நபருக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

05.மேலும், சகல இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகளும் மாதிரி இலக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதானது சட்டப் பணிகளை முறையாக நடாத்திச் செல்வதன் பொருட்டு அத்தியவசியமாகும்.

கலாநிதி.ஜே.ஏ.சுமித்.
பீடைக் கொல்லிபதிவாளர்.

பிரதிகள்

1. விவசாயபணிப்பார் நாயகம் - தகவலுக்காக
2. அரச இரசாயன பகுப்பாய்வாளர், அரச இரசாயனபகுப்பாய்வுதிணைக்களம் - தகவலுக்காக
3. பணிப்பாளர், தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் - தகவலுக்காக
4. பணிப்பாளர்,தோட்டப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் - தகவலுக்காக
5. பணிப்பாளர் நாயகம் இலங்கை தரநிலை நிறுவனம் - தகவலுக்காக
6. பணிப்பாளர் (வி.சா.நா.பா) - தகவலுக்காக
7. சகல மாவட்ட விவசாய பணிப்பாளர்கள் - தகவலுக்காக

8. உள்ளக கணக்காய்வாளர் - தகவலுக்காக
9. திரு.எஸ்.என்.எல். இரத்னவீர (உ.வி.ப.)தகவலுக்காகவும் தேவையான இணைப்புமற்றும் மீளாய்வு மேற்கொள்ளும் பொருட்டு - தகவலுக்காக